# சோழமண்டலம் லாபம் 50 சதவீதம் அதிகரிப்பு

**சென்னை, ஜூலை 29:** முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் முதல் காலாண்டு லாபம் 50.3 சதவீதம் அதிகரித்தது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

நடப்பு 2016-17 நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் வருவாய் ரூ.1,114.81 கோடியாக இருந்தது. கடந்த நிதி ஆண்டின் இதே கால அளவில் ரூ.990.46 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. வழங்கப்பட்ட கடன்கள் ரூ.3,508 கோடியிலிருந்து 30 சதவீதம் அதிகரித்து ரூ.4,561 கோடியாக காணப்பட்டது.

நிகர லாபம் ரூ.111.10 கோடியிலிருந்து 50.3 சதவீதம் அதிகரித்து ரூ.167.09 கோடியாக இருந்தது.

கடந்த 2015-16 முழு நிதி ஆண்டில் நிறுவனத்தின் வருவாய் ரூ.4,213.75 கோடியாகவும், நிகர லாபம் ரூ.574.65 கோடியாகவும் இருந்தது என சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.